**மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது தாது மணல் குவாரிகள் மீதான நடவடிக்கைகள் குறித்து இன்று (19.2.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:-**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான்,லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற தாது மணல் கனிமங்களை அகழ்வு செய்ய அனுமதி அளிக்கப்பட்ட தாது மணல் கனிம குத்தகைக் குவாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பாகும்.

2. கடற்கரை கனிம மணல் மற்றும் ஆற்றுப்படுகைகளில் கிடைக்கக்கூடிய தாது மணல் கனிமங்களான கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான்,லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுக்கு , சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957 மற்றும் கனிமச்சலுகைகள் விதிகள், 1960 ஆகியவைகளின் கீழ் சுரங்க குத்தகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் அட்டவணை – I ன் பகுதி 'பி'– ன் கீழ் வரும் அணுசக்தி கனிமங்களான இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுடன் கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களும் கலந்து இருந்தால் மேற்படி சட்டத்தின் பிரிவு 5 (i)–ன் கீழ் மத்திய அரசின் ஒப்புதலை பெற்ற பின்னரே மாநில அரசால் கனிம குத்தகை உரிமம் வழங்க இயலும். கார்னெட் மற்றும் அவற்றுடன் கலந்துள்ள கனிமங்களை எடுக்க திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 11 உரிமங்களும், மதுரை மாவட்டத்தில் 2 உரிமங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 6 உரிமங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 53 உரிமங்களும், மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 உரிமங்களும், ஆக மொத்தம் 81 கனிம குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. இந்த தாது மணல் கனிமங்கள் அடங்கிய கனிம குத்தகை பகுதி 5 ஹெக்டேர் முதல் 50 ஹெக்டேர் வரை இருந்தால், மாநில சுற்றுச்சூழல் அமைப்பிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். குத்தகை பகுதி 50

ஹெக்டேருக்கும் மிகைப்பட்டிருந்தால் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

4. கடலோரப் பகுதிகளில் கடற்கரை உயர் அலை மட்டத்திலிருந்து 500 மீட்டர் அளவுவரை கடற்கரை முறைப்படுத்தப்பட்ட பகுதி (Coastal Regulatory Zone) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் கனிம சுரங்கங்களுக்கு, 1991ம் ஆண்டு கடற்கரை முறைப்படுத்துதல் மண்டல அறிக்கையின்படி மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையிடமிருந்து தடையின்மை சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

5. குத்தகைக்கு விண்ணப்பிக்கப்பட்ட பரப்பு 5 ஹெக்டேருக்கும் கீழ் இருக்குமாயினும் வரையறுக்கப்பட்ட கடற்கரை முறைப்படுத்துதல் சட்டம் 1991 அறிவிக்கையின் படி மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் (Ministry of Environment and Forests) தடையில்லா சான்று பெறப்பட வேண்டும்.

6. கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களுக்கு சுரங்க திட்டம் (Mining Plan) ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் இந்திய சுரங்க கழகத்திற்கு (Indian Bureau of Mines) வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கனிமங்களான ரூட்டைல், இல்மனைட், சிர்கான் மற்றும் மேனோசைட் போன்ற கனிமங்களுக்கு மத்திய அரசின் அணு சக்தி கழகத்திற்கு (Atomic Minerals Division) சுரங்கத்திட்ட ஒப்புதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

7. ஒப்புதல் அளிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்தின்படி, (Approved Mining Plan) கனிம அகழ்வு மேற்கொள்ளப்படாவிட்டால் கனிமச்சலுகை மற்றும் மேம்படுத்துதல் விதிகள்,1988–ன் விதி 13(2)ன் படி மத்திய அரசைச் சேர்ந்த இந்திய கனிமக்குழுமத்தின் மண்டல கனிம கட்டுப்பாட்டு தலைமை அலுவலர் (Regional Controller of Mines, Indian Bureau of Mines) மேற்படி கனிம குத்தகையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வாய்ப்புள்ளது. இத்தவறுகள் சரிசெய்யப்பட்ட பின்னர் அதே விதிகளின் கீழ் கனிம குத்தகையை தொடர ஆணையிடவும் வாய்ப்புள்ளது.

8. கனிம உற்பத்தியை வரன்முறைப்படுத்துதல், இயற்கை சுற்றுச்சூழல், வெள்ளம், சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுத்தல், பொது சுகாதாரத்திற்கு உண்டாகும் ஆபத்தை தடுத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957–ன் பிரிவு 4 A(i)ன் கீழ்

விதி மீறல்கள் செய்யப்பட்ட கனிம குத்தகையை நிறுத்தி வைக்கவோ அல்லது நிரந்தரமாக ரத்து செய்யவோ மாநில அரசுடன் கலந்து ஆலோசித்த பின்னர் மத்திய அரசின் கனிம அமைச்சகத்திற்கு அதிகாரம் உண்டு.

9. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957 பிரிவு 24 ன்படி, மத்திய அரசு அல்லது மாநில அரசுகளின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் கனிம குத்தகை பகுதிகளை ஆய்வு செய்யவும், ஆவணங்களை ஆய்வு செய்யவும், அளவீடு மற்றும் சர்வே மேற்கொள்ளவும், இருப்புக் கணக்கை ஆய்வு செய்யவும் அனுமதி அளிக்கிறது. அதே சட்டத்தில் பிரிவு 21 (5)−ன்படி அனுமதியின்றி கனிம சுரங்கம் செய்யும் நபர்களிடமிருந்து மேற்படி கனிமங்களை பறிமுதல் செய்யவும் அல்லது மேற்படி கனிமங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தால் அக்கனிமங்களின் விலை, அபராதம், உரிமத் தொகை மற்றும் பிற வரிகளை வசூல் செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

10. மத்திய அரசு நிர்ணயித்தவாறு கார்னெட் கனிமத்திற்கு உரிமத் தொகை இந்திய கனிம குழுமம் மாதந்தோறும் வெளியிடும் விற்பனை மதிப்பில் (Ad-valorem) அடிப்படையில் 3 சதவிகிதம் என்ற கணக்கில் வசூலிக்கப்படுகிறது. இல்மனைட், ரூட்டைல் போன்ற கனிமங்களுக்கு நிகர வருமான (Ad valorum basis) அடிப்படையில் 2 சதவிகிதம் உரிமத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில் மத்திய அரசு மட்டுமே உரிமத் தொகையை நிர்ணயம் செய்ய முடியும்.

11. தேசிய பசுமை தீர்ப்பாயம் (National Green Tribunal) தன்னுடைய 14.08.2013 நாளிட்ட தீர்ப்பில் முறைகேடாக மணல் அள்ளப்படுவது தொடர்பாக ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழுவை அமைக்கப்போவதாக கூறியுள்ளது. சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்றிதழ் பெற்ற பின்னரே கடற்கரை கனிமங்கள் குறிப்பாக தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில் வெட்டியெடுக்கப்பட வேண்டுமென்று தனது ஆணையில் தேசிய பசுமை தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

**தூத்துக்குடி நேர்வு**

12.தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தன்னுடைய 06.08.2013 நாளிட்ட கடிதத்தில் கார்னெட், இல்மனைட், ரூட்டைல் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களின் தனித்தன்மை மற்றும் விலை மதிப்பு ஆகியவற்றை கருத்திற் கொண்டு முறைகேடாக இக்கனிமங்களை வெட்டி எடுப்பது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார்.

**13.** தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் மேற்படி வேண்டுகோளுக்கிணங்க, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் தனது பரிந்துரையை **08.08.2013** அன்று அரசுக்கு அனுப்பியிருந்தார். இவற்றை பரிசீலித்த அரசானது வருவாய்த்துறை செயலரின் தலைமையின் கீழ் ஒரு சிறப்புக்குழுவை அமைத்து தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள **6** தாது மணல் சுரங்க குத்தகைகளையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டுமென அரசாணை (நிலை) எண். **156** தொழில் (எம்எம்டி**1**) துறை, நாள் **08.08.2013**–ல் ஆணையிட்டது. மேலும் தூத்துக்குடி மாவட்டத்தின் தாது மணல் சுரங்க குத்தகை நடவடிக்கைகளை முழுவதுமாக நிறுத்தி வைக்கவும், மேற்படி சிறப்புக்குழுவானது ஒரு மாதத்திற்குள் அறிக்கையை அரசுக்கு அளிக்க வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டது. அதன்படி சிறப்புக்குழுவானது தனது களப்பணியினை மேற்படி மாவட்டத்தில் **17.09.2013** அன்று முடித்துள்ளது.

**<u>திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்ட நிகழ்வுகள்</u>**

**14.** புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் தனது **17.09.2013** நாளிட்ட கடிதத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் **53** தாது மணல் கனிம குத்தகைகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் **11** தாது மணல் கனிமக் குத்தகைகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் **9** தாது மணல் கனிமக் குத்தகைகளும், மற்றும் மதுரை மாவட்டத்தில் **2** கனிம குத்தகைகளும் ஆக மொத்தமாக **75** தாது மணல் கனிம குத்தகைகள் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், மற்றும் பிற கனிமங்களை அகழ்ந்தெடுக்க தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தார்.

**15.** மேலும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட சிறப்புக்குழுவே திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் தனியாருக்கு வழங்கப்பட்ட கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், போன்ற தாது மணல் கனிமங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை பகுதிகளை ஆய்வு செய்து ஒருமித்த ஆய்வறிக்கையை அளிக்க ஆணையிடலாம் என அரசுக்கு பரிந்துரை செய்திருந்தார்.

**16.** அதன்படி திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், போன்ற தாது மணல் கனிமங்களை அகழ்வு செய்ய தனியாருக்கு குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்ட **75** சுரங்கக்குத்தகை பகுதிகளில் அரசு நிறுவனமான IRE Ltd., நிறுவனத்திற்கு **3** சுரங்க குத்தகை பகுதி மற்றும் திருவாளர்கள். டாமின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட **1**

சுரங்க குத்தகை பகுதி ஆக மொத்தம் 4 சுரங்க குத்தகை பகுதி நீங்கலாக மீதமுள்ள 71 சுரங்கக் குத்தகை பகுதிகளை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கவும் மற்றும் மேற்படி மாவட்டங்களில் இயங்கி வரும் தாது மணல் குவாரிகளின் செயல்பாட்டினை நிறுத்தி வைக்கவும் வருவாய்த்துறை செயலர் தலைமையின் கீழ் சிறப்புக்குழு அமைத்து அரசாணை (நிலை) எண், 173 தொழில் (எம்எம்டி1) துறை நாள் 17.09.2013–ல் அரசு ஆணையிட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட சிறப்புக் குழு ஆய்வினை முடித்து அது தொடர்பான அறிக்கையை அரசுக்கு விரைவாக அளிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

17. வருவாய்த் துறை செயலரின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவானது தனது புலத் தணிக்கையை திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் முடித்துள்ளது. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் நீதி மன்ற ஆணைகளின் காரணமாக மேற்படி ஆய்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

<u>கார்னெட் மணல் தொடர்பான உயர்நீதிமன்ற வழக்குகள்</u>

18. திரு.R.அப்பு நடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அரசுக்கு தனது 21.12.2008 நாளிட்ட மனுவில் திரு. டி. தயாதேவதாஸ் அவர்களுக்கு சொந்தமான நிறுவனங்களான திருவாளர்கள். சதர்ன் என்டர்பிரைசஸ் மற்றும் இந்தியன் கார்னட் சாண்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு திருச்சி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் வழங்கப்பட்ட கனிமக் குத்தகைகளில் சுற்றுச்சூழல் விதி மீறல்கள் உள்ளதாகக் கூறி அதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டார். மேலும், அவர் தொடர்ந்த ரிட் எண். 175/2010 நாள் 09.02.2010ன் படி மேற்கூறிய நிறுவனங்களுக்கு வழங்கிய கனிம குத்தகைகளில் அரசு தணிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் ஆணை பெற்றார்.

19. இதன் தொடர்ச்சியாக திரு.தயாதேவதாஸ் அவர்களுக்கு சொந்தமான நிறுவனங்கள் அனுமதியின்றி பல கோடி ரூபாய் மதிப்புள்ள கார்னெட் மணல் வெட்டி எடுக்கப்பட்டதை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அரசுக்கு தெரிவித்திருந்தார். இம் முறைகேடுகள் குறித்து அரசுக் கடிதம் எண்.17407/தொழிற்துறை எம்.எம்.டி.1/2011 நாள்: 14.11.2011ல் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளைக்கு தெரியப் படுத்தப்பட்டது. இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நீதிப்பேராணை மனு எண். 175/2010ன்

மீது **18.11.2011** அன்று இறுதி ஆணையை வழங்கிய உயர்நீதி மன்றம் இவ்வழக்கில் சம்பந்தமுடையவர்களுக்கு உரிய வாய்ப்பு அளித்து சட்டத்திற்கு உட்பட்டு திரு. சு. அப்புநடேசன் அவர்களின் **21.12.2008** நாளிட்ட மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் என ஆணையிட்டது. உயர்நீதிமன்ற ஆணையின்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் குழு ஒன்றினை அமைத்து திரு.தயாதேவதாஸ் என்பவருக்கு சொந்தமான சுரங்க குத்தகை உரிம பகுதிகளை ஆய்வு செய்து கள்ளத்தனமாக பல கோடிக்கணக்கான மதிப்பிலான **39,38,190** மெட்ரிக் டன் கார்னட் கலந்த மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டதை கண்டறிந்து அரசுக்குத் தெரியப்படுத்தினார். இதன் மூலம் **14,46,592** மெ.டன் கார்னட் கலந்த கார்னெட் மணல் வெவ்வேறு இடங்களில் திரு.தயாதேவதாஸ் அவர்களுக்குச் சொந்தமான மணல் பிரிக்கும் ஆலைகளில் இருப்பது அறியப்பட்டது. இந்த ஆலைகளில் இருப்பிலுள்ள மணல் அளவினை தவிர ஏனைய மணல்கள் அனைத்தும் எவ்வித அனுமதியின்றி அப்புறப்படுத்தப்பட்டதும் அறியப்பட்டது.

**20.** எனினும், திரு.டி.தயாதேவதாஸ் மேற்கண்ட உயர்நீதிமன்ற ஆணையை எதிர்த்து மறு பரிசீலனை வழக்கு எண். **61/2011** என்ற வழக்கினை தொடுத்திருந்தார். திருச்சி மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் மீது அரசு நடவடிக்கை எடுத்து மேற்கண்ட நிறுவனங்களுக்கு திருச்சி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் வழங்கப்பட்ட ஐந்து **(5)** சுரங்க குத்தகைகளை அரசு ஆணை (நிலை) எண்கள் **8, 9, 10, 11** மற்றும் **12** தொழில் (எம்.எம்.டி.**1**) துறை, நாள் **01.02.2013**ன்படி ரத்து (determination) செய்து ஆணையிட்டது. இந்த ஆணைகளை எதிர்த்து **5** உயர்நீதிமன்ற வழக்குகள் எண். **2111/2013** முதல் **2115/2013** வரை இந்நிறுவனங்களால் உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிர் வாதவுரை அரசால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை தனது **6.2.2013** அன்று வழங்கிய இடைக்கால ஆணையில், மேற்படி சுரங்கங்களில் முறைகேடாக வெட்டியெடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள கார்னெட் மணலை அப்புறப்படுத்தக் கூடாது என்றும், மனுதாரரும் அம்மணலுக்கு இடையூறு செய்யக் கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது. இந்த இடைக்கால ஆணை தற்போது நடைமுறையில் உள்ளது.

**21.** சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையில் இருந்த மறுபரிசீலனை மனு எண். **61/2011** மற்றும் அனைத்து வழக்குகளும் ஒரே தொகுப்பு

வழக்காக (Batch Case) மாற்றப்பட்டு சென்னை உயர்நீதி மன்ற அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

22. மேற்படி வழக்குகள் தவிர திரு. டி.தயாதேவதாஸ் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண். 5549/2007 மற்றும் 1233/2012 ஆகிய வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவ்வழக்குகளில் சி.பி.ஐ மூலம் தாது மணல் குவாரிகளின் விதி மீறல்களையும் முறைகேடுகளையும் விசாரிக்க வேண்டுமென கோரியிருந்தார். திரு.வி.சுந்தரம், இ.ஆ.ப., (ஓய்வு) என்பவர் தன்னையும் மேற்படி வழக்கில் பிணைத்துக் கொள்ளக் கோரி மாண்புமிகு உயர்நீதி மன்றத்திற்கு மனு செய்திருந்தார். இவ்வழக்கில், அரசு சார்பாக திரு.ஏ.எல்.சோமையாஜி, மாநில அரசு தலைமை வழக்குரைஞர் அவர்கள் நியமிக்கப்பட்டு மேற்படி வழக்குகளுக்காக வாதாடினார்.

23. சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை மறு சீராய்வு மனு எண். 61/2011, நீதிப்பேராணை மனுக்கள் என். 14399/2011, 14400/2011, 5549/2007 மற்றும் 1233/2012 ஆகியவைகளின் மீது 12.12.2013 அன்று தனது தீர்ப்பை அளித்தது. அமர்வு நீதிமன்றமானது மறு சீராய்வு மனு எண். 61/2011–ஐ தள்ளுபடி செய்தது. மேலும் நீதிப்பேராணை மனுக்கள் எண். 5549/2007 மற்றும் 1233/2012 ஆகியவைகளின் மீது தீர்ப்பளித்த அமர்வு நீதிமன்றம், வருவாய்த் துறை செயலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவானது, இரு வாதப்பிரதிவாதங்களையும் கேட்டு அதன் மீது பரிந்துரைத்து அரசுக்கு அனுப்பவும், அரசு அந்த ஆய்வறிக்கையை தகுதியிருப்பின் ஆய்வு செய்து சட்டத்திற்கு உட்பட்டு தேவையான ஆணை பிறப்பிக்கவும் ஆணையிட்டது. மேலும் மாண்புமிகு உயர்நீதி மன்றம் 14399 மற்றும் 14400/2011 ஆகிய வழக்குகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட விசாரணை அறிக்கைகள் மற்றும் ஆணைகளின் படி மனுதாரரின் கோரிக்கை முடிவுற்றது என கருதி தள்ளுபடி செய்தது. வழக்கு எண்.5549/2007 மற்றும் 1233/2012 ஆகியவைகளுடன், இவ்வழக்கில் இணைத்து கொள்ளக் கோரிய மற்ற மனுக்கள் அனைத்தும் முடிந்ததாக கூறி ஆணையிட்டது.

24. மாண்புமிகு உயர்நீதி மன்ற ஆணைப்படி திரு.டி.தயாதேவதாஸ் 26.12.2013 அன்றும் திருவாளர்கள் வி.வி.மினரல் மற்றும் டிரான்ஸ்வேர்ல்ட் இன்டியா (பி) லிமிடெட் நிறுவனம் 30.12.2013 அன்றும் தங்களது கோரிக்கை மனுக்களை ஆய்வுகுழுத் தலைவரிடம் அளித்தன. கோரிக்கை மனுக்கள் தற்போது குழுவின் ஆய்வில் உள்ளன.

**25.** திரு.வி.அன்பழகன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண். **34270/2013**–ன்படி அரசு செயலர், வருவாய் துறை, திரு. ககன்தீப்சிங்பேடி, இ.ஆ.ப., தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவில் பிற மாநிலங்களைச் சேர்ந்த புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சார்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாக நியமிக்க ஆணை கோரியிருந்தார். மேற்படி மனுவின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆணை ஏதும் இதுவரை பிறப்பிக்கவில்லை.

**26.** திருவாளர்கள். பீச் மினரல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பாக திரு. என்.பால்துரை என்கிற பெருமாள் என்பவர் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தொடுக்கப்பட்ட வழக்கு எண். **8562/2014**–ல் அரசாணை (நிலை) எண்.**156**, தொழில் (எம்.எம்.டி.**1**) துறை, நாள் **08.08.2013** மற்றும் அரசாணை (நிலை) எண்.**173** தொழில் (எம்.எம்.டி.**1**) துறை, நாள் **17.09.2013** –ன் படி அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவானது தனது அறிக்கையினை விரைவில் சமர்ப்பிக்க வேண்டுமென கோரியிருந்தார். இவ்வழக்கில் அரசு எதிர் வாதுரையை தாக்கல் செய்திருந்தது. மேற்படி வழக்கு **04.08.2014** அன்று மனுதாரரால் திரும்பப் பெறப்பட்டு அதன் அடிப்படையில் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை மேற்படி வழக்கினை தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளது.

**27.** மேலும் திருவாளர்கள் டிரான்ஸ்வேர்ல்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் வி.வி.மினரல்ஸ் (பர்ம்) ஆகியோர் வழக்கு எண்கள். **12849** முதல் **12880/2014** வரை உள்ள **32** வழக்குகளை தொடுத்தள்ளனர். மேற்படி நிறுவனத்தாரின் சுரங்கப் பணிகளை விதி எண்.**13 (2)** கனிம பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி சட்டம் **1988**ன்படி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ள திருவாளர்கள்.இந்திய சுரங்க கழகம் (IBM) மற்றும் அதன்மீது நடவடிக்கை எடுத்துள்ள மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி ஆகியோரின் ஆணைகளின் மீது இடைக்கால தடை உத்தரவு வழங்க கோரியுள்ளனர். மேற்படி வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு **07.07.2014** அன்று இந்திய சுரங்க கழகம் (IBM) பிறப்பித்துள்ள இடைநிறுத்து ஆணைகளை நிராகரித்து ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வழக்கில் ஏற்கனவே அரசாணை எண்கள் . **156**, **173**/ தொழில் (எம்.எம்.டி.**1**) துறை, நாள். **08.08.2013** மற்றும் **17.09.2013** ஆகியவற்றின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேல் நடவடிக்கைகள் தமிழக அரசின் சார்பில் அவசியம் இல்லை.

**28.** மேலும் திருவாளர்கள் டிரான்ஸ்வேர்ல்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் வி.வி.மினரல்ஸ் (பர்ம்) நிறுவனத்தார் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு

எண்கள். 16716, 19641/2014 –ன் படி அரசால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு தனது தாது மணல் தொடர்பான ஆய்வறிக்கையினை சமர்ப்பிக்க எதிர்ப்பினை தெரிவித்து வழக்கு தொடுத்துள்ளனர். மேற்படி வழக்குகளில் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை ஆணை நாள்.12.12.2013, வழக்கு எண். (எம்.டி)1233/2012–ல் தெரிவித்துள்ள வழிமுறைகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும் என்றும் மனுதாரர்களால் கோரப்பட்டுள்ளது.

**29.** வழக்கு எண்கள். 16716, 19641/2014 ஆகியவைகளை அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.டி.எஸ்.மூர்த்தி மற்றும் அட்வகேட் ஜெனரல் திரு.ஏ.எல்.சோமயாஜி ஆகியோர் முன்நின்று நடத்தி வருகின்றனர். அரசு தரப்பில் எதிர் வாதுரைகள் 09.07.2014 அன்று முதன்மை செயலர், தொழில் துறை அவர்களாலும், 11.07.2014 அன்று அரசு செயலர், வருவாய் துறை அவர்களாலும் அரசு வழக்கறிஞர் வழியாக மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி வழக்குகளின் மறு விசாரணை 12.12.2014 அன்று உத்தரவிடப்பட்டு மீண்டும் 19.01.2015 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 17.02.2015க்கு வழக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. திரு.டி.தயாதேவதாஸ் என்பவர் தன்னையும் மேற்படி வழக்குகளில் பிணைக்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

**30.** கடற்கரைக் கனிமங்களான தாது மணல் குவாரிகளின் முறைகேடுகள் குறித்து விசாரிக்க சிறப்பு ஆய்வுக்குழுவினை அமைக்கக்கோரி திரு.விக்டர் ராஜமாணிக்கம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நலவழக்கு எண் 1592/2015 மூலம் கோரியுள்ளார். இவ்வழக்கு 23.01.2015 அன்று மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ் அவர்கள் அடங்கிய அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனை விசாரித்த உயர்நீதிமன்றம் நான்கு வார காலத்திற்குள் விரிவான எதிர் வாதுரையினை சமர்ப்பிக்க எதிர்வாதிகளான மத்திய அரசின் சுரங்கத்துறை அமைச்சகத்தின் செயலாளர், அணுசக்தி துறையின் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் செயலாளர், இந்திய கனிமக்குழுமத்தின் மண்டல கனிம கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலர், தமிழக அரசின் தலைமை செயலர், கூடுதல் தலைமை செயலாளர் தொழிற்துறை, ஆணையர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., செயலர், ஊரக வளர்ச்சித் துறை ஆகியவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தி.மு.க.வினர் குறிப்பிடும் ககன்தீப் சிங் பேடி அறிக்கை தூத்துக்குடி மாவட்டம் பற்றியது.

நீதிமன்ற ஆணைகளின் காரணமாக, மற்ற மாவட்டங்களில் ஆய்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது பற்றியும், எனது பதிலில் சொல்லியுள்ளேன்.

முழுமையான அறிக்கை பெற்ற பிறகே, அதை ஆய்வு செய்து முடிவு எடுக்க இயலும்.

*******